MAY 2024 **U/ID 30618/ULA2A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. மு.வ. வின் தாத்தாவின் பெயர் என்ன?

2. மு.வ. பிறந்த ஆண்டு மற்றும் பெற்றோர் பெயர்களைக் குறிப்பிடுக.

3. எளிமை எதனைப் போன்றது?

4. சமுதாய அறம் என்றால் என்ன?

5. கலைச்சொல்லியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

6. மொழிபெயர்ப்பு தருக – Convener, Witness

7. கட்டுரையினை எங்ஙனம் தொடங்குதல் வேண்டும்?

8. கட்டுரையின் வகைகளுள் நான்கினைக் குறிப்பிடுக.

9. பொருந்திய சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக: ஆழி-ஆறு, கடல், குளம்.

10. நம்பியகப்பொருளின் ஆசிரியர் யார்?

11. நிகண்டு என்றால் என்ன?

12. சைவ சித்தாந்த நூல்கள் மொத்தம் எத்தனை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. ஆழ்ந்த உறக்கத்தின் இன்றியமையாமைகளை எழுதுக.

14. புலன் அறம் என்றால் என்ன? விளக்குக.

15. ஆங்கில மரபுத் தொடர்புகளைத் தமிழாக்குக: (அ) To while away the time (ஆ) Add fuel to the fire (இ) Tit for tat (ஈ) To beat about the bush (உ) take to one's heel

16. கட்டுரையின் மையப்பகுதி எங்ஙனம் அமைதல் வேண்டும்?

17. மொழிபெயர்ப்பு நெறிகள் குறித்து எழுதுக.

18. சைவ மடங்கள் வளர்த்த தமிழ் எத்தகையது? விளக்குக.

19. விளக்குக: நாடகத்தமிழ்

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. தனிமனித எளிமை ஒழுக்கம் குறித்து நல்வாழ்வு கூறுவனவற்றை எடுத்துரைக்க.

21. நேர்காணல் என்றால் என்ன? நேர்காண்பவரின் பண்புகளைப் பட்டியலிடுக.

22. நல்ல கட்டுரையின் இயல்புகள் எவையெவை? விளக்கி உரைக்க.

23. சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய புலவர்களுள் சிலரை அறிமுகம் செய்க.

24. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கவும்:–

மொழிபெயர்ப்பாளரையும் ஒருவகையில் ஒரு சிறந்த ஆசிரியர் என்று கூறலாம். இவரும் ஒரு வகையில் மக்களுக்குக் கற்பிக்கிறார். அறியாத அல்லது அறிந்தும் ஈடுபாடில்லாத ஒரு மொழியில் ஈடுபாடு கொள்ளச் செய்ய, இத்தகு மொழி பெயர்ப்பாளர்கள் கிரியா ஊக்கிகளாகப் பயன்பட்டு வருகின்றனர். ஒரு மொழிபெயர்ப்பாளருக்குத் திறனாய்வுத்திறனும் தனித்து முடிவெடுக்கும் அனுபவமும் கட்டாயமாகத் தேவைப்படும் தகுதிகளாகின்றன. அத்தகு மொழி பெயர்ப்பாளர்களுக்குச் சில அடிப்படைத் தகுதிகள் தேவை. அவை மொழித் திறனறிவு, சொற்களஞ்சிய அறிவு, இலக்கண அறிவு, மரபுத்தொடர் அறிவு, சொற்பொருளியல் அறிவு, சமூகப்பண்பாட்டறிவு என்ற அடிப்படையில் அமையும். ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலநூலாசிரியரை, பெறுமொழியாளர் அருகே கொண்டு நிறுத்தவும், படிப்போரை மூலநூலாசிரியரிடம் கொண்டு விடவும் வேண்டிய பணியை நயமாய்ச் செய்கிறார். சோர்வு என்பது மொழிபெயர்ப்பாளருக்கு ஆகாது. அதனால் அவர் பாடுபட்டுச் செய்த பணியின் தரம் கெட்டுவிடும்.

———————